Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
|---|---|
| | |

**Pearson Edexcel International GCSE**

Centre Number | Candidate Number

**Time** 2 hours 30 minutes

**Paper reference** **4TA1/01**

# Tamil

## PAPER 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  *– there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  *– use this as a guide as to how much time to spend on each question.*

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.
- Good luck with your examination.

*Turn over* ▶

P66506A
©2021 Pearson Education Ltd.
1/1/1/1/1/1/1/1/

P 6 6 5 0 6 A 0 1 2 0

Pearson

## SECTION A: READING

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

**1** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி **தமிழில்** கேள்விகளுக்குரியச் சரியான எழுத்துக்களைப் பெட்டியில் இடுக.

மினெட்டே டிசில்வா இலங்கையின் முதல் நவீனக் கட்டிடக்கலை வடிவமைப்பாளர் ஆவார். பெண்கள் இவ்வாறான துறையில் அக்காலத்தில் தொழில் அல்லது பணி புரிவது இயல்பானதன்று. இருப்பினும் இவர் தனது தந்தையின் எதிர்ப்பையும் மீறி தனது தொழிலைத் தொடர்ந்தார். முதலில் மும்பை பின்னர் லண்டனுக்கு படிப்பதற்காகச் சென்றார்.

ஒரு காலத்தில் கொழும்பில் உள்ள "ஆல்பிரட் வீட்டுத் தோட்டங்கள்" அவர் வடிவமைத்ததில் மிகவும் பிரபலமானதாகும். அது இலை வடிவங்கள் பொருத்தப்பட்ட இரும்பு வாயிலைக் கொண்டுள்ளது. மரங்களுடன்,விறாந்தைகள் மற்றும் ஒரு குளம் உள்ள முற்றங்கள் வரை இயற்கை பாரம்பரியக் கைவினைத்திறனுடன் இணக்கமாக நவீனத்துவ வடிவங்களையும் கொண்டதாக அமைந்தது.

ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான வீடுகளைக் கட்டுவதை விடப் பாரம்பரியம் மற்றும் நவீன வடிவமைப்புகள் இரண்டையும் கலந்த நல்ல தரமான கட்டிடங்களை உருவாக்குவதில் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார். இதனால் அவரிடம் பணிபுரிந்த கட்டிடக்கலைப் பணியாட்கள், தங்களது கைவினையின் மூலம் ஒரு நல்ல சம்பாத்தியம் பெறவும் உதவியது.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

| | | |
|---|---|---|
| **Example** | மினெட்டே டேசில்வா இலங்கையின் … நவீனப் பெண் கட்டிடக் கலைஞர் ஆவார். | *A* |
| **1** (a) | மினெட்டே டேசில்வா முதன் முதலில் … படிக்கச் சென்றார். | |
| **1** (b) | இதன் கதவுகள் … வடிவம் கொண்ட வாயிலைக் கொண்டுள்ளது. | |
| **1** (c) | அது படிக்கட்டுகள் வாயிலாக … மாடி வரை நீடிக்கின்றது. | |
| **1** (d) | அவர் … பாரம்பரியத்தையும் சேர்த்து அமைத்தார். | |
| **1** (e) | அவர் … கட்டிடங்களை அமைத்தார். | |
| **1** (f) | இதன் மூலம் அவர்களால் … பெற முடிந்தது. | |

**A** முதல்
**B** ஆண்கள்
**C** ஸ்டீல்
**D** இலங்கை
**E** பெண்கள்
**F** ஓய்வு சம்பாதிக்கவும்
**G** தரமான
**H** நவீனத்தையும்
**I** சம்பாத்தியம்
**J** இரண்டாவது
**K** மும்பைக்கு
**L** பாரம்பரிய
**M** இலை

**(Total for Question 1 = 6 marks)**



DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**2** கீழே தரப்பட்டுள்ள உரையாடலை வாசித்து 8 பொருத்தமான விடைகளுக்குப் புள்ளடியிடுக. சில விடைகளுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட புள்ளடிகளை இட அல்லது எதையுமே இடாதிருக்க வேண்டியிருக்கும்.

**உள்ளூர் – வெளியூர்ச் சுற்றுலா பற்றிய விவாதம்:**

**சந்திரன்:**



ஒரு உண்மையான சுற்றுலா நாம் வாழும் வீட்டிற்கு நெருக்கமான தூரத்தில் இருக்க வேண்டும் என நான் உறுதியாக நம்புகிறேன். அது அதிக சுதந்திரத்தையும், இணக்கத்தையும் வழங்குகின்றது. இதனால் நீங்கள் அடிக்கடி பயணம் செய்ய, குறுகிய பயணங்களை மேற்கொள்ளவும் முடியும். உங்கள் வரலாறு, பாரம்பரியத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவும் இது உதவுகிறது. அனைத்துக் குடும்ப உறவுகளுடனும் இவற்றை அனுபவிக்க முடியும்.

**மீனா:**



வெளிநாட்டுச் சுற்றுலா பல வளரும் நாடுகளுக்கு ஒரு விரைவான வளர்ச்சியின் முக்கிய ஆதாரமாகும். இது உலகின் பிற பகுதிகளைப் பார்ப்பது மட்டுமல்லாது வெளிநாட்டுக் கலாச்சாரங்களை அறிந்து கொள்ளவும் உதவுகிறது. வெளியூர்ப் பயணம் உங்களுக்கு பல நினைவுகளும் சாகசங்களும் நீடிக்க உதவுகிறது.

**வெற்றி:**



உள்ளூர் விடுமுறைகள் மற்றும் சுற்றுலாவிற்குக் குறைவான செலவேயாகும். ஒருவர் அவரவர் வசதிகளுக்கு ஏற்பத் தங்கள் சொந்தப் போக்குவரத்தை எடுத்துக் கொள்ளலாம் அல்லது கேரவன் (caravan) விடுமுறை போலவும் தங்கலாம். இது ஒரு தெரியாத மொழியைப் பேசுவது மற்றும் அறிமுகமில்லாத உணவுகளைச் சாப்பிடுவது போன்ற அழுத்தங்களையும் தவிர்க்கிறது. உடல்நலக்குறைவு அல்லது அன்புக்குரியவரின் தேவைகளை கவனித்துக்கொள்வது போன்ற அவசரங்களை எளிதாக எதிர்கொள்ள ஏதுவாகிறது.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

| | | சந்திரன் | மீனா | வெற்றி |
|---|---|---|---|---|
| **உதாரணம்** | உள்ளூர்ச் சுற்றுலா விடுமுறை நாட்கள் குடும்பங்களுடன் நெருக்கமாக இருக்க உதவுகிறது. | ☒ | ☐ | ☒ |
| **A** | இது உள்ளூர்ப் பாரம்பரியத்தைக் கற்றுக்கொள்ள உதவுகிறது. | ☐ | ☐ | ☐ |
| **B** | சுற்றுலா என்பது பொருளாதாரத்திற்கு முக்கியமானது. | ☐ | ☐ | ☐ |
| **C** | விடுமுறை சுதந்திரம் மற்றும் இணக்கத்தையும் வழங்குகிறது. | ☐ | ☐ | ☐ |
| **D** | அதிகச் செலவாகும் வெளிநாட்டு விடுமுறையை நீங்கள் தவிர்க்கலாம். | ☐ | ☐ | ☐ |
| **E** | அறிமுகமான உணவுகளைச் சுவைக்கலாம். | ☐ | ☐ | ☐ |
| **F** | புதிய சொற்களைக் கற்க வேண்டிய தேவையில்லை. | ☐ | ☐ | ☐ |
| **G** | நினைவில் நிற்கக்கூடிய சாகசங்களைத் தருகிறது. | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

**3** "பொறியியல் துறையில் பெண்கள்" பற்றிய கட்டுரையைப் படியுங்கள். உங்கள் பதில்களைத் தமிழில் எண்கள் அல்லது சொற்களால் எழுதுக.

இக்காலத்தில் பெண்கள் பொறியியல் துறையில் வெற்றிகரமாக நுழைகிறார்கள். அதிகம் படித்த, எத்துறையிலும் பணி செய்யும் பெண் திறமைகளைத் தக்க வைத்துக் கொள்வது என்பது நாட்டின் நிதி, பொருளாதார வளர்ச்சிகளுக்கு மிகவும் அவசியமாகும்.

இத்துறையில் ஒரு தொழிலைத் தொடங்கும் பெண்கள், தங்கள் ஆண் சக ஊழியர்களைப் போலவே சம்பாதிப்பை எதிர்பார்க்கலாம் என்பது மிகவும் உற்சாகமானது.

விருது பெற்ற மின் பொறியியலாளர் கெர்ரின் பிரையன், ஒரு பொறியாளராக பெண்களை ஊக்குவிப்பதற்காக "மை மம்மி இஸ் அன் இஞ்சினியர்" ("My mummy is an Engineer") உள்ளிட்ட புத்தகங்களைக் குழந்தைகளுக்காக வெளியிட்டுள்ளார்.

ஆண், பெண் வேற்றுமை காட்டும் விளையாட்டு பொம்மைகள், மீடியா விளம்பரங்கள் சிறார்களின் மனதில் சில சமயங்களில் தவறான தகவல்களைத் தருகின்றன.

இக்காலத்தில் பெண்கள் பலதரப்பட்ட பாடங்களை எடுத்துப் படிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். அதோடு இது சரியான வேலைவாய்ப்பு பெற பொருத்தமான தராதரங்களை அடையவும் செய்கின்றது.

எனினும், இருபதாம் நூற்றாண்டில் அவ்வளவாகப் பெண்கள் இத்துறையை மேற்கொள்ளவில்லை. இன்றைய காலகட்டத்தில் மேலும் பெண்கள் பல தொழில் செய்ய முனைகிறார்கள். ஒவ்வொரு பள்ளியும் வேலைவாய்ப்புக்கள், அறிவுரை மற்றும் தொழில்சார்ந்த படிப்புகளைப் பற்றிய போதனைகளை மாணவர்களுக்கு அளித்து அவர்கள் வெற்றிகரமான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அளிக்கிறது.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(a) ........................................ துறையில் சேருவதில் பெண்கள் ........................................
முன்னேற்றம் அடைந்துள்ளனர். **(2)**

(b) ஒரு நாட்டின் முன்னேற்றம் பெண்களின் ........................................ மற்றும்
........................................ சார்ந்துள்ளது. **(2)**

(c) ஆண்களைப் போல பெண்களும் சரி நிகரான ........................................ பெறுவது
மிக முக்கியம். **(1)**

(d) கெர்ரின் பிரையன் ........................................ பெண்கள் ........................................
வேலை வாய்ப்புகளைப் பெற ஊக்கமளிக்கின்றன. **(2)**

(e) சில சமயங்களில் விளம்பரங்கள் ........................................ தகவல்களைத்
தருகின்றன. **(1)**

(f) ஆலோசனையும், வழிகாட்டுதலும், மாணவர்களுக்குத் தேவையான
........................................ மற்றும் தகவல்களைத் ........................................ . **(2)**

(g) பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை கடந்த நூற்றாண்டுகளில்
படிப்படியாக ........................................ வருகிறது. **(1)**

(h) அதிகரித்து வரும் கல்வி ........................................ பெண்களின் வெற்றிக்கு மிக
முக்கியமான காரணமாகும். **(1)**

**(Total for Question 3 = 12 marks)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** பாரம்பரிய தமிழ் உணவுகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய பின்வரும் கட்டுரையைப் படியுங்கள். கேள்விகளுக்குக்காண விடைகளைத் தரப்பட்ட கட்டுரையிலிருந்து தமிழ் மொழியில் எழுதுக. பதில்களை முழு வசனத்தில் எழுதவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

சங்ககாலத் தமிழ்க் கலாச்சாரத்தில் பல சுவையான உணவு வகைகள் இருந்தன. அது அவர்களின் தினசரி சமையல், இனிப்பு, கசப்பு, உப்பு, புளிப்பு ஆகிய சில சுவைகளைக் கொண்ட சமையல் மரபுகளைக் கொண்டதாக இருந்தது.

பண்டைய தமிழர்கள் சிறுதானியங்கள் நிறைய உண்டனர். இன்றையத் தமிழ்ச் சமையலில் அதிலும் அரிசி மற்றும், பயறு இன்றும் பிரதான உணவாக இருந்து வருகிறது. மேலும் ராஜா அன்னம் எனும் உயர்வான அரிசி வகையானதால் அது பண்ட மாற்றங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்டது. அது மகாராஜாவின் சமையலறையில் உபயோகப்படுத்தப்பட்டது. மேலும் இரகசிய சமையற் குறிப்புக்கள், இரகசிய அரச சமையற் குறியீடுகள் அரசக் குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்காகக் கையாளப்பட்டது. சங்க நாட்களில், “சோமபானம்” போன்ற மதுபானங்கள் மற்றும் இறைச்சி கவிஞர்களுக்குப் பரிமாறப்பட்டன.

பல தலைமுறைகளாக உணவு பல்வேறு மாறுதல்களை அடைந்துள்ளது. இக்காலத்தில் நிறைய மசாலா மற்றும் பல்வேறு நாட்டின் சுவைகளின் கலவையைப் பயன்படுத்தப்படுவதால் உணவு முறையில் பல மாற்றங்கள் வந்துவிட்டன. அவ்வுணவு அவர்கள் வசித்த நிலத்துடன் ஒத்துப்போகும் வகையில் மாற்றப்பட்டு சுவைகளால் பாதிக்கப்படுகிறது.

இருப்பினும் தமிழர்கள் பொங்கல் பண்டிகை போன்ற காலங்களில் பாரம்பரிய சுவைகளை கொண்ட சாம்பார், மெது வடை, சர்க்கரைப் பொங்கல் போன்ற சில உணவுகளை இன்றும் சமைத்து வருகின்றனர்.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (a) (i) தமிழர்களால் இன்றும் சாப்பிடப்படும் இரண்டு உணவு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(ii) உயர்தர வகையான அரிசியின் மற்றுமொரு பெயரென்ன?

**(1)**

..............................................................................................................................................

(iii) அரசக் குடும்பத்தினர் உணவு சமைத்தலின் பொழுது இரகசியக் குறியீடுகள் உபயோகித்ததன் காரணம் என்ன?

**(1)**

..............................................................................................................................................

(iv) பழைய நாட்களில் ________ மற்றும் ________ அரச விருந்தினர்களுக்கு அளிக்கப்படும் விருந்துகளாகக் கருதப்பட்டன.

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(v) மக்களின் உணவுப் பழக்கத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏதேனும் இரண்டு காரணங்களைக் கூறுங்கள்.

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

(vi) பாரம்பரியச் சமையல் நடைமுறைகளைப் பாதுகாக்க உங்களுடைய ஏதேனும் இரண்டு கருத்துகளைப் பரிந்துரைக்கவும்.

**(2)**

..............................................................................................................................................

..............................................................................................................................................

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**4** (b) இரண்டு நண்பர்களிடையே மரங்கள் நடுதலின் முக்கியத்துவம் பற்றிய கலந்துரையாடலைப் படியுங்கள். பின்வரும் கேள்விகளுக்குத் தமிழில் பதிலளிக்கவும்.

முத்து:

மரங்கள் எங்களது சிறந்த நண்பர்கள். மரங்கள் நடுதலின் பயன்களைப் பற்றி நம் முன்னோர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தியுள்ளனர். இந்தக் கிரகம் வாழக்கூடியதாக இருப்பதற்கும், ஆக்ஸிஜன் (Oxygen – பிராணவாயு) மற்றும் உணவுச் சங்கிலியில் அவற்றின் பங்கு எனவும் பல முக்கியமான நன்மைகள் அடங்கும்.

சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார நன்மைகள் மரங்களை நடுவதால் மேம்படுகின்றன. மரங்களை வணங்குவது என்பது சில கலாச்சாரங்களில் நன்மைகளை ஒப்புக்கொள்வதற்கான மற்றொரு வழி என்றும் கருதப்படுகிறது. இது நமக்கு நிழல், பழங்கள், பூக்கள், பட்டை மற்றும் தாவரங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்து எடுக்கப்படும் பல மதிப்புமிக்க மருந்துகளையும் தருகிறது. மரங்களை நடுவதால் இதர நன்மைகளும் உண்டு. பல்வேறு பட்ட மர வகைகளை நடுவதன் மூலம் பல நன்மைகளை அதிகரிக்க முடியும். அந்தச் சூழலில் வாழும் அரியவகைப் பூச்சி, பறவைகள் மற்றும் பிற தனித்துவமான உயிரினங்கள் பாதுகாப்பு முயற்சிகளுக்கும் அது உதவுகிறது.

தங்கம்:

மரங்களின் வேர்கள் மண்ணை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளும். இதனால், வெள்ளம் வருவதற்கான வாய்ப்புகள் கடுமையாகக் குறைகின்றன. வேர்கள் நிலத்தடி நீரைப் பாதுகாப்பது மட்டுமின்றி நீர்ச் சுழற்சியையும் ஆதரிக்கின்றன.

காலநிலை மாற்றத்திற்கு உதவ சரியான வகை மரங்கள் நடப்படுவது மிகவும் முக்கியமாகும். ஓக், (oak) பீச் (Beech) மற்றும் மேப்பிள் (maple) போன்ற அகலமான இலைகளைக் கொண்ட தாவரங்கள் பொருத்தமான கருதப்படுகின்றன. இவைகளின் இலைகள் பெரிய பரப்பளவைக் கொண்டுள்ளதினால், அதிக ஒளிச்சேர்க்கையை உருவாக்க உதவுகிறது.

எனவே பூச்சிகள் அல்லது நோய்களுக்கும் எதிராகப் போராட, அந்நிலப்பரப்பைத் தயார் செய்வது அம்மரங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளில் மிக முக்கியமானதாகும். தக்க நேரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்றால் இது ஒரு பகுதியில் உள்ள முழு இன மரத்தையும் அழிக்கக்கூடும்.

DO NOT WRITE IN THIS AREA

**4** (b) (i) முத்துவின் கருத்தின்படி, மரங்களை நடுவதினால் உண்டாகும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பயனுள்ள காரணங்களிலிருந்து இரண்டைக் கூறுங்கள்.

•

**(1)**

•

**(1)**

(ii) தங்கம் விவாதித்தபடி, மர வளர்ச்சியை அச்சுறுத்தும் காரணங்களிலிருந்து இரண்டைக் கூறுங்கள்.

•

**(1)**

•

**(1)**

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**SECTION B: WRITING**

Answer Question 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** மாசு பற்றிய பின்வரும் சொற்களைப் பயன்படுத்திக் கிட்டத்தட்ட 55 சொற்களில் தமிழில் எழுதுக. நீங்கள் குறிப்பிடப்பட்ட சொற்கள் யாவையும் பயன்படுத்தியாக வேண்டும்.

**மாசு**

உங்கள் பகுதியில் உள்ள மாசு வகைகள்

மாசு அதிகரிப்பின் காரணங்கள்

மாசுபாட்டின் விளைவுகள்

உங்களின் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

**(14)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA



P 6 6 5 0 6 A 0 1 2 2 0

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**

**6** பின்வரும் மூன்று தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, கிட்டத்தட்ட 90 சொற்களைப் பயன்படுத்தி தமிழில் ஒரு கட்டுரை எழுதுக. பொருத்தமான நடையைக் கையாளுக.

**தெரிவு 1**



(a) நீங்கள் விளையாடும் உங்களுக்குப் பிடித்த விளையாட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுங்கள். **அதில் நீங்கள் குறிப்பிட வேண்டியவை பின்வருமாறு:**

- உங்களுக்குப் பிடித்த விளையாட்டின் பெயரும், விவரமும்.
- இந்த விளையாட்டு பற்றிய உங்கள் ஞாபகமும், ஈடுபாடும்.
- இந்த விளையாட்டை விளையாட நீங்கள் பிறரை எவ்வாறு ஊக்குவிப்பீர்கள்.

**(26)**

**தெரிவு 2**

(b) உங்கள் நண்பனுக்கு சமீபத்தில் நீங்கள் பார்த்த திரைப்படத்தைப் பற்றி ஒரு கடிதம் எழுதவும்

- இப்படத்தைத் தேர்வு செய்ததன் காரணங்கள்.
- உங்களுக்கு அதிகம் பிடித்தக் காட்சிகள்.
- இப்படத்தைப் பிறருக்கு சிபாரிசு செய்வதற்கான காரணங்கள்.

**(26)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

தெரிவு 3

(c) வருங்காலப்படிப்புத் திட்டம் பற்றி உன் நண்பனுக்கு கீழ்க்கண்ட வார்த்தைகளை உள்ளடக்கி ஒரு மின்னஞ்சல் எழுதவும்.

- உன்படிப்பின் விவரமும், அதற்கான காரணமும்.
- இக்கல்வி நிறுவனத்தைத் தேர்வு செய்ததற்கான காரணங்கள்.
- இப்படிப்பிற்குப் பின் ஏற்படக்கூடிய வேலை வாய்ப்புக்களின் விவரங்கள்.

**(26)**

**Indicate which question you are answering by marking a cross ☒ . If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒ .**

**Question 6(a)** ☒ **Question 6(b)** ☒ **Question 6(c)** ☒

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(Total for Question 6 = 26 marks)

**TOTAL FOR SECTION B = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION C: TRANSLATION INTO TAMIL

**Write your answer in the space provided.**

**7** பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்.

The Olympic Games are an international event held every four years. This event was first held at the Olympic Plains in Greece. It is not only very important for the individual participant but also for their nation to gain global recognition. The winners in the games consider this as the major achievement in their sporting career. The Olympics unites people with common interest at an international level. It also develops good relationships amongst the different countries. These games are the most watched sporting event throughout the world.

**(20)**

**(Total for Question 7 = 20 marks)**

**TOTAL FOR SECTION C = 20 MARKS**
**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

**Source information**

**Question 1**
Source based on: https://www.theguardian.com/cities/2018/dec/14/minnette-de-silva-the-brilliant-female-architect-forgotten-by-history

**Question 2**
Source from: https://www.dangerous-business.com/the-pros-and-cons-of-travel/
https://www.allenscaravans.co.uk/blog/staycation-vs-vacation-the-great-british-debate/

© Vsanandhakrishna/Getty Images
© Vsanandhakrishna/Getty Images
© hadynyah/Getty Images

**Question 3**
Source based on: https://www.theguardian.com/careers/2019/jun/26/how-changing-attitudes-are-closing-the-gender-gap-in-engineering

**Question 4**
Source from: https://www.ijltemas.in/DigitalLibrary/Vol.8Issue4/74-78.pdf

**Question 6**
© Rakdee/Getty Images